
# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 26.07.2022 supeedsam.com supeedsam@gmail.com


# பிரபகாரன் சிறந்தவர்

## காலிமுகத்திடல் போராட்டகாரர்கள் இராணுவத்தினரை பார்த்து சாட்டையடி!



புலிகள் அமைப்பை தாம் மதிப்பதாகவும் , விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சிறந்தவர் என காலி முகத்திடல் போராட்டகாரர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு படையினர், ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் உள்ள பிரதேசத்தை கைப் பற்றியபின்னர், போராட்டகாரர்கள் இதனை கூறியுள்ளனர்.

அத்துடன் இலங்கை இராணுவத்திற்கு எதிராக சுமத்தப்படும் போர் குற்றச்சாட்டுக்கு இன்னும் பதில் இல்லை எனவும் காலிமுகத் திடல் போராட்டகாரர்கள் மீதான தாக்குதல் ஊடாக இராணுவத்தின் போர் குற்றம்

02 ஆம் பக்கத்தில்...

## ஒகஸ்ட் 9 இல் ரணில் விரட்டப்படுவார்!



ராஜபக்சக்கள் மக்களால் எப்படி விரட்டப்பட்டார்களோ அதேபோன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஒகஸ்ட் 9ஆம் திகதி விரட்டியடிக்கப்படுவார்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

காலிமுகத்திடல் மக்கள் போராட்டம் ஜுலை 14ஆம் திகதி வெற்றியுடன் முடிந்து விட்டது, அதன் பின்னர் அங்கு கிளர்ச்சிக்கான

02 ஆம் பக்கத்தில்...

## ஒமிக்ரோன் உப பிறழ்வு வேகமாக பரவுகிறது

கொரோனா வைரஸின் ஒமிக்ரோன் திரிபின் உப பிறழ்வு வேகமாகப் பரவி வருவதாகவும் நாட்டில் அது கட்டுப்படுத்தக் கூடிய நிலையில் உள்ளது என்றும் சுகாதார அமைச்சின் சிரேஷ்ட ஒருங்கிணைப்பாளர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

நேற்று (25) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த போதே மேற்குறிபிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

கொரோனா மரணங்கள் மற்றும் தொற்றாளர் எண்ணிக்கையில் சிறு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மீண்டுமொரு கொரோனா அலை ஏற்படுத்துவதை கட்டுப்படுத்தும் வகையில் பொறுப்புடன் செயற்பட

02 ஆம் பக்கத்தில்...

## கோட்டபாயவை கைது செய்யுமாறு தென்னாபிரிக்க மனித உரிமைகள் குழு கோரிக்கை



சிங்கப்பூரில் வசிக்கும் இலங்கையின் முன்னாள் அதிபர் கோத்தபய ராஜபக்சவுக்கு எதிராக மனித உரிமை அமைப்பு புகார் அளித்து கைது செய்ய வேண்டும் என கோரியுள்ளது.

குறிப்பாக இலங்கையில் இருந்து தப்பி சிங்கப்பூரில் வசிக்கும் முன்னாள் அதிபர் கோத்தபய ராஜபக்சவிற்கு சிக்கல்கள் அதிகரிக்கலாம்.

இலங்கையின் முன்னாள் அதிபரை கைது செய்யுமாறு தென்னாபிரிக்க மனித உரிமைகள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமைகள் அமைப்பு சிங்கப்பூரில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

இலங்கையில் பல தசாப்தங்களாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான உள்நாட்டுப் போரில் ராஜபக்சேவின் பங்கு குறித்து,

02 ஆம் பக்கத்தில்...

## விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் மக்கள் வழங்கிய ஆணை தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் விரைவில் பொதுத் தேர்தலை நடத்தி, புதிய மக்கள் ஆணைக்கு செல்ல வழியமைக்க வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## செயற்பாட்டாளர்கள் 06 பேருக்கு வெளிநாடு செல்ல தடை

ஆறு செயற்பாட்டாளர்களுக்கு வெளிநாட்டு செல்ல தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தினால் குறித்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி ஜோசப் ஸ்டாலின், அருட்தந்தை ஜீவந்த பீரிஸ், வசந்த முதலிகே மற்றும் எரங்க குணசேகர ஆகியோருக்கு இவ்வாறு வெளிநாடு செல்ல தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு தமிழ்த் தரப்புக்கு அழைப்பில்லை

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான உத்தியோகபூர்வ அழைப்பு இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிசாத் பதியுத்தீன் தெரிவிக்கையில், அவ்வாறான அழைப்பு இதுவரை கிடைக்கப்பெறவில்லை என தெரிவித்தார்.

அவ்வாறானதொரு அரசாங்கம் அமைவதை ஊடகங்களில் இருந்து தான் பார்த்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...




## இலங்கையின் பரிதாப நிலை; நெஞ்சை உருக வைக்கும் சம்பவம்!

இலங்கையில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத பொருளாதார நெருக்கடி காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதீத பணவீக்கம் காரணமாக பொருட்களின் விலைகள் விண்ணை தொடும் அளவுக்கு உயர்ந்துள்ளன. அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளது.



இந்த அதிகரிப்பினை பணவசதி படைத்தவர்கள் சமாளித்துக் கொண்ட போதும், மத்திய மற்றும் நாளாந்த சம்பளம் பெறும் தரப்பினர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பல இடங்களில் மூன்று வேளை உணவு உட்கொண்டு வந்த மக்கள் தற்போது ஒரு நேரம் மட்டும் அளவாக உணவு உட்கொள்ளும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...



# கதிர்காம பாதயாத்திரிகளுக்கு நிதி உதவி வழங்கிய சமூகசேவகருமான க.துரைநாயகம்

(எஸ்.சபேசன்)

கதிர்காம பாதயாத்திரிகளுக்கு குடிநீர்வழங்குவதற்காக சுவிஸ் உதயம் அமைப்பின் ஏற்பாட்டில் போரதீவு எரிபொருள் நிரப்பு நிலையத்தின் அனுசரணையில் 50 ஆயிரம் ரூபாவினை இன்று சனிக்கிழமை 23ஆம் திகதி உகந்தை முருகன் ஆலயத்தில் வைத்து லகுகல பிரதேச செயலாளர் என்.நவநீதராஜாவிடம் வழங்கிவைக்கப் பட்டது.

போரதீவு எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளரும் சுவிஸ் உதயத்தின் தாய்ச்சங்கத்தின் பொருளாளரும் சமூகசேவகருமான க.துரைநாயகம் அவர்களது சொந்த நிதியினை இதற்காக வழங்கி வைத்துள்ளார்

இந்நிதியினை இவ் அமைப்பின் இலங்கைக்கான பொருளாளர் பாவாணர் அக்கரைப்பாக்கியன் அதனுடைய பிரதிச் செயலாளர் ஊடகவியலாளர்சா.நடனசபேசன்



அதிபர் எஸ்.செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு நிதியினை வழங்கிவைத்தனர்

இந்நிகழ்வில் கிழக்குமாகாண கலாசார பணிப்பாளர்

ச.நவநீதன் ஆலய குருக்கள் சிவசிறிசீத்தாராமன் கலந்துகொண்டனர்.

வழமையாக அரசிடமிருந்து கிடைக்கும் நிதியுதவி இம்முறை இதுவரை கிடையாத காரணத்தினால் பிரதேச செயலாளர் அவர்கள் பொது அமைப்புகள் தனவந்தர்கள் சமுக சேவையாளரகளிடம் உதவி கோரி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக கொரோனா காரணமாக காட்டுப் பாதை திறக்கப்படவில்லை

ஆதலால் இம்முறை 22 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காட்டுப் பாதை திறக்கப்பட்டு .அதன் ஊடாக பல்லாயிரக்கணக்கான பாதயாத்திரை அடியார்கள் பயணம் செய்ய இருக்கின்றார்கள்.

இவர்களுக்கு வழமையாக அம்பாறை அரசாங்க அதிபரிடமிருந்து கிடைக்கும் நிதியுதவி யினால் குறித்த விடையங்களை லாகுகலை பிரதேச செயலகம் செய்து வந்தது .

நாட்டில் நிலவும் சமகால பொருளாதார நெருக்கடி காரணமாக இம்முறை அத்தகைய நிதியை பெற முடியாத சூழல் நிலவுகிறது.

எனவே பாதயாத்திரை குழுவினருக்கு இந்த வசதிகளை வழங்குவதற்காக பொது அமைப்புகள் தலைவர்கள் மற்றும் தனவந்தர்கள் உதவுமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க சுவிஸ் உதயம் அமைப்பு இவ் உதவியினை வழங்கிவைத்துள்ளது.

# திருகோணமலை கரடிப்பூவல் கிராமத்தில் குடிநீர் தொகுதி



(அ . அச்சுதன்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசசபைக்கு உட்பட்ட குடாக்கரைபகுதில் தேசிய நீர்வளங்கள் வடிகாலமைப்பு சபையின் மூலம் விநியோகிக்கப்படுகின்ற நீர் விநியோகம் அனைத்து குடும்பங்களுக்கும் வேகமாக வருவது இல்லை என்றும் தினந்தோறும் நீர் விநியோகம் விநியோகிக்கப்படுவதில்லை என்றும்.

இந்த பிரச்சனைக்கு நிரந்தர தீர்வினை பெற்றுத் தருமாறும் பொது மக்களும், சங்கங்களும் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை கௌரவ உப தவிசாளர் முகமட் நௌபர் அவர்களிடம் எழுத்து மூலமான கோரிக்கையினையும் முன்வைத்திருந்தனர்.

இதற்கான நிரந்தர தீர்வினை பெற்றுக்கொடுக்கும் ஒரு அங்கமாக குடாக்கரை பிரதேசத்தில் கரடிப்பூவல் கிராமத்தில் சேய்க் அப்துல்லா அன்நூரி நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆழ்துளைகுழாய்க்கிணறு அமைத்து குடிநீர் தொகுதி உப தவிசாளர் முகமட் நௌபர் அவர்களால் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இன் நிகழ்வில் அப்பகுதி முக்கியஸ்தர்கள்சேய்க் அப்துல்லா அன்நூரி நிறுவனத்தின் திட்ட முகாமையாளர், பொதுமக்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

## இலங்கையின் பரிதாப நிலை; நெஞ்சை உருக வைக்கும் சம்பவம்!

இதனை உறுதிப்படுத்தும் வகையில் அண்மையில் நடந்த சம்பவம் ஒன்று பலரையும் மிகவும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

சமகாலத்தில் மிகவும் ஏழ்மையான வயோதிப தம்பதியின் வாழ்க்கை முறையை வெளிப்படுத்தும் வகையில் சமூக வலைத்தளத்தில் சம்பவம் பதிவிடப்பட்டுள்ளது.

அனுராதபுரத்தை சேர்ந்த வயோதிப தம்பதி சற்று தூரத்திலுள்ள பிக்கு ஒருவரை சந்திக்க சென்றுள்ளனர். அங்கு சென்றவர்கள் உணவகம் ஒன்றிற்கு சென்றுள்ளனர்.

கிழிந்த ஆடைகளை அணிந்திருந்த தம்பதி அங்கிருந்த உணவகம் ஒன்றுக்கு சென்றுள்ளனர். அங்கிருந்த உணவுகளின் விலைகளை ஒவ்வொன்றாக விசாரித்துள்ளனர். எனினும் அவர்களுக்கு அந்த விலைக்கு உணவினை பெற்றுக்கொள்ள முடிவில்லை. மிகவும் குறைந்த விலையில் இருந்த சிறிய பனிஸ் ஒன்றையும் தேனீர் ஒன்றை வாங்கியுள்ளனர். அதனை இருவரும் பிரிந்து பசியாறியுள்ளனர்.

குறித்த வயோதிப தம்பதியின் செயற்பாடுகளை கண்காணித்துக் கொண்டிருந்த பெண் ஒருவர் அவர்களிடம் சென்று உணவு வாங்கித் தர உதவுவதாக தெரிவித்துள்ளார். எனினும் அதனை அவர்கள் மறுத்துள்ளனர்.

அதற்கு பதிலளித்தவர்கள் வேண்டாம் நாங்கள் வீடு திரும்ப நேரம் போதாமல் போய் விடும். காலையில் எங்களுக்கு இடியாப்பம் கிடைத்தது. பகல் பசிக்கவில்லை. இரவு வீட்டிற்கு சென்று ஏதாவது செய்து கொள்கிறோம். நன்றி என அவர்கள் கூறியுள்ளனர்.

தங்களிடமிருந்து சில 20 நாணயத்தாள்களை கடை உரிமையாளரிடம் கொடுத்து விட்டு அங்கிருந்து சென்றுள்ளனர்.

எனினும் அவர்களை பார்த்து மிகவும் வேதனையடைந்த அந்த பெண், 5 நிமிடங்கள் பொறுத்திருங்கள் என்று கூறிவிட்டு பக்கத்தில் உள்ள கடைக்கு சென்று அத்தியாவசிய உணவு பொருட்கள் சிலவற்றை கொள்வனவு செய்து கொடுத்ததுடன் அவர்களின் கையில் 3000 ரூபாய் பணத்தையும் அந்த பெண் வழங்கியுள்ளார்.

சில 20 ரூபாய் நாணயத்தாள்களை மட்டும் தம்வசம் வைத்திருந்த வயோதிப தம்பதியிடம் வார்த்தைகள் வரவில்லை. அந்த நேரத்தில் அவர்கள் வடித்த கண்ணீர் அவர்களின் வலியின் கொடுமை வெளிப்படுத்தியதாக அந்தப் பெண் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த தம்பதி கண்ணீருடனே தமது இல்லத்தை நோக்கி நடக்கத் தொடங்கியுள்ளனர்.

இதுபோன்று இலங்கையின் பல பகுதிகளில் எவ்வளவு குடும்பங்கள் உணவு இன்றி தவித்து வருவார்கள். முடிந்தவரை அயலவர்களுக்கு உள்ளதை கொடுத்து பசியை போக்குவோம் என குறித்த பெண் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஒமிக்ரோன் உப பிறழ்வு வேகமாக பரவுகிறது

வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

அவசியமற்ற ஒன்று கூடல்கள் மற்றும் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தி, சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் பொது மக்களை அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, பொது இடங்களுக்குச் செல்லும் போதும் பயணத்தின்போதும் முகக்கவசத்தை அணியுமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டில் மீண்டும் கொரோனா பரவும் அபாயம் காணப்படுவதாக தெரிவித்துள்ள அமைச்சு, பரவலைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக இடைவெளி மற்றும் அடிக்கடி கைகளை கழுவுதல் போன்ற சுகாதார வழிகாட்டுதல்கள் தொடர்ச்சியாக பின்பற்றப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்

ஜனநாயகத்தை நிலைநாட்டும் நோக்கில் தேர்தல் நடத்தப்பட்டால் அதற்கான செலவை ஏற்க நிறுவனங்கள் இருப்பதாகவும் அதற்கு ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளை உதாரணமாகச் சுட்டிக்காட்ட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு கொடுப்பனவும் பெறாமல் தேர்தல் கடமைகளில் ஈடுபடத் தயார் என அரச அதிகாரிகள் ஏற்கனவே அறிவித்துள்ளதால், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் தேர்தலை நடத்துவது பெரிய பிரச்சினையாக இருக்காது என மஹிந்த தேசப்பிரிய வலியுறுத்தியுள்ளார்.

## சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு ...

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனிடம் வினவிய போது, சர்வகட்சி அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

ணீஅழைப்பு கிடைத்தவுடன் அத்தகைய அரசில் இணைவது குறித்து பரிசீலிப்பதாக அவர் கூறினார்.

சர்வகட்சி ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் எம்.பி மனோ கணேசனிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு, இதுவரையில் அதற்கான அழைப்பு வரவில்லை என தெரிவித்தார்.

ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர், நாடாளுமன்ற கட்சித் தலைவர்களை சந்தித்த போது, அவ்வாறானதொரு அரசாங்கம் அமைக்கப்படும் என தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஓகஸ்ட் 9 இல் ரணில் விரட்டப்படுவார்!

ஆயத்தங்களே நடைபெற்றன, அதனையே படையினர் அடக்கியுள்ளனர் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் மேலும் கருத்துத் தெரிவித்த அநுரகுமார,

கொழும்பு காலிமுகத்திடலில் அன்றும் போராடியவர்கள் மக்கள்தான். இன்றும் போராடுபவர்கள் அதே மக்கள்தான். இந்நிலையில், அமைதி வழியில் போராடும் மக்களைக் கிளர்ச்சியாளர்கள் என்று பொய் கூறி அவர்கள் மீது ஆயுதப் படைகளைக் கொண்டு புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தாக்குதல் நடத்த உத்தரவிட்டமை மாபெரும் அராஜகம் ஆகும். இது போராடும் மக்களுக்கு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரணில் வீட்டுக்குப் போ என்பதே மக்களின் தற்போதைய கோரிக்கை. இதற்கு மதிப்பளித்து ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவியிலிருந்து உடனடியாக விலகி வீட்டுக்குச் செல்ல வேண்டும். இல்லையேல் ராஜபக்சக்கள் போல் அடுத்த மாதம் (ஓகஸ்ட்) 9 ஆம் திகதி மக்களால் அவர் வீட்டுக்கு விரட்டியடிக்கப்படுவார்8221; என்றார்.

மே மாதம் 9ஆம் திகதி பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ச விலகியிருந்தார். ஜ^ன் 9ஆம் திகதி பஸில் ராஜபக்ச விலகியிருந்தார். ஜ^லை 9ஆம் திகதி கொழும்பில் மக்கள் எழுச்சிப் போராட்டத்தால் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ச தப்பியோடி கடந்த 14ஆம் திகதி பதவி விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோட்டபாயவை கைது செய்யுமாறு...

அந்த நேரத்தில் ராஜபக்சே நடத்திய அடக்குமுறை காரணமாக போர்க் குற்றவாளியாக கருத வேண்டும் எனவும், அவரை கைது செய்ய வேண்டும் என கோரியுள்ளது.

அந்த அமைப்பு கூறுகிறது. இதற்கு முன்பும், உள்நாட்டுப் போரின் போது இலங்கை ராணுவம் மற்றும் ராஜபக்சேவின் பங்கு குறித்து பல சர்வதேச அமைப்புகள் கேள்வி எழுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையின் சிங்கள பௌத்த பெரும்பான்மையினர் அண்மைக்காலம் வரை கோட்டாபய ராஜபக்ஷவை ஒரு போர் வீரனாகவே கருதினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அதன் தலைவர் பிரபாகரனை ஒழிப்பதில் ராஜபக்சேவின் பங்கு மனித உரிமை மீறய செயல் என சிலரால் குற்றம் சாட்டப்படுகிறது. தென்னாப்பிரிக்காவின் சர்வதேச உண்மை மற்றும் நீதித் அமைப்பின் வழக்கறிஞர்கள் சிங்கப்பூர் அட்டர்னி ஜெனரலிடம் குற்றவியல் புகாரை தாக்கல் செய்துள்ளனர்.

73 வயதான ராஜபக்சே போர்க்குற்றத்திற்காக மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டியுள்ளது. அவரை விரைவில் கைது செய்ய வேண்டும் என்று அந்த அமைப்பு கோரியுள்ளது.

## பிரபகாரன் சிறந்தவர்

உறுதியாகி இருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

சரத் பொன்சேகா கட்டளை வழங்கிய இராணுவத்தினரே சரியாக பணியாற்றியதாக தெரிவித்த அவர்கள் நீங்கள்(படையினர்) தாக்குதல் நடத்துவதை முழு உலகமும் பார்த்துக்கொண்டிருக்கின்றது. நீங்கள் இராணு உடையில் சென்றால் காரி துப்புவார்கள். உங்களை விட புலிகள் சிறந்தவர்கள் என்றும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு மரியாதை செலுத்துகிறோம் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நீங்கள் இப்படி செயற்பட்டதன் காரணமாகவே புலிகள் எங்களையும் தாக்கினர், கோபம் கொண்டதாகவும் காலிமுகத் திடல் போராட்டகாரர்கள் ஒருவர் இராணுவத்தினரை நோக்கி கூறியுள்ளார்.

# ஆழ்ந்த அனுதாபகங்கள்



சகல கலாசூரி
கலைக்கோட்டன்
மட்டக்களப்பைச் சேர்ந்த
அமரர் அழகையா
இருதயநாதன் அவர்களின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்பிரர்த்திப்பதோடு ,
அவர்களின்
குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த
அனுதாபகங்களை
தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுபீட்சம் குழுமம்

தா.வேதநாயகம்

# திருமலையில் நினைவஞ்சலி நிகழ்வு



(அ . அச்சுதன் )

திருகோணமலையில் உள்ள வெலிக்கடைத் தியாகிகள் நினைவு அரங்கில் நினைவஞ்சலி நிகழ்வு 27ம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

1983.ஜூலை 25, 27ஆம் திகதிகளில் வெலிக்கடை வெஞ்சிறையில் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி , தங்கதுரை, ஜெகன் உட்பட 53 வீர மறவர்களினது நினைவாக அமைக்கப்பட்ட இந்த தியாகிகள் அரங்கில் நினைவஞ்சலி நிகழ்வு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிசக்தியின் அதிகாரத்தை வெளிச்சக்திகளுக்கு வழங்குவது ஆபத்தானது



எமது நாட்டின் எரிசக்தியை முகாமைத்துவப்படுத்தும் செயற்பாட்டு ரீதியான அதிகாரத்தை வெளிநாடுகளுக்கு வழங்கி, நாட்டின் மின்விளக்கு சுவிட்சை வெளிநாடுகளிடம் ஒப்படைப்பதன் மூலம் நாட்டை இருளில் மூழ்கடிக்கும் நிலையே ஏற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டின் எரிசக்தி கட்டமைப்பை முன்னேக்கி கொண்டு செல்லும் வகையிலான புதிய மின்சாரக் கொள்கையை உருவாக்குவதே தமது நோக்கமாகும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஆனால் பெரும்பாலானோர் விற்பனை செய்து அல்லது தனியார்மயமாக்குவதையே செய்த வன்னமுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குழுவை நேற்று முன்தினம் (24) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்த போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மின்சாரசபை ஒரு தேசிய வளம் என்பதோடு அதைப் பாதுகாத்த வன்னம் முன்னேற்றுவதும், அதிக இலாபம் ஈட்டுவதற்கு தேவையான திட்ட வரைவை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் முறையான மின்சார உற்பத்தி செயன்முறையை மேற்கொள்ளும் வேலைத்திட்டம் தொடர்பில் தாம் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# கல்லடி உப்போடை அருள்மிகு ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய வருடாந்த சடங்கு உற்சவம்





(கல்லடி நிருபர்)

கிழக்கிலங்கையின் மீன்பாடும் தேன்நாடாம் மட்டுமாநகரில் தேத்தாமர நிழலில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்துக்கொண்டிருக்கும் ஆகிபராசக்தி பேச்சியம்மன் ஆலய வருடாந்த சடங்கு உற்சவமானது எதிர்வரும் 31.07.2022 திகதி திருக்கதவு திறத்தல் மற்றும் திருக்கும்பம் வைத்தலுடன் ஆரம்பமாகவுள்ளது.

திருக்கதவு திறக்கப்பட்டு, கும்பம் வைத்தலுடன் ஆரம்பமாகவுள்ள முதல் நாள் சடங்கானது ஆலய பரிபாலன சபையினர் சார்பாக நடாத்தப்படவுள்ளதுடன், இரண்டாம் நாளான 01.08.2022 திங்கட்கிழமை பகல் சடங்கினை டாக்டர் பூபால ரெத்தினம் குடும்பமும் இரவுச் சடங்கினை ஊர்க்குடிமகன் மா.சுந்தரலிங்கம் அவர்களும் நடத்தவுள்ளனர். செவ்வாய்க்கிழமை 02.08.2022 திகதி ''கண்ணகித் தாயாரிடம் செல்லல்'' நிகழ்வினை 4ஆம் குறிச்சிப் பொதுமக்கள் நடாத்தவுள்ளனர்.

03.08.2022 புதன்கிழமை 5ஆம் குறிச்சிப் பொதுமக்கள் திருச்சடங்கை நடத்துவதுடன் தொடர்ந்து 04.08.2022 வியாழக்கிழமை 1ஆம் குறிச்சிப் பொதுமக்களும், 05.08.2022 வெள்ளிக்கிழமை பலிச்சடங்கினை 2ஆம் குறிச்சிப் பொதுமக்களும், 06.08.2022 சனிக்கிழமை 3ஆம் குறிச்சிப் பொதுமக்களும் நடத்தவுள்ளனர்.

07.08.2022 திகதி ஞாயிற்றுக்கிழமை மடிப்பிச்சை எடுத்தல், நெல் குற்றல் நிகழ்வுகளைத் தொடர்ந்து, 08.08.2022 திகதி திங்கட்கிழமை அதிகாலை வேளையில் விநாயகப்பானை பொங்கலிட்டு அதனைத்தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் பள்ளையப்பானை பொங்கி, அம்பாளுக்கு பள்ளையம் படைத்து கன்னிமாருக்கும் பரிகலங்களுக்கும் படையல் படைத்து பூசை வழிபாடுகள் இடம்பெற்று, தேவாதிகள் உள்ளிட்ட பூசகர்களினால் அடியார்களுக்கு மடிப்பிச்சை பிரசாதம் வழங்கியதனைத் தொடர்ந்து, அம்பாளின் திருக்கும்பங்கள் சொரிதலுடன் இவ்வாண்டிற்கான சடங்கு உற்சவம் இனிதே நிறைவடையவுள்ளதுடன், எதிர்வரும் 10.08.2022 திகதி புதன்கிழமை வைரவர் பூசை இடம்பெறவுள்ளது.

ஆலய சடங்கு உற்சவங்கள் அனைத்தையும் ஆலய முதன்மை பூசகர் கு.கிருஷ்ணகுமார் தலைமையிலான பூசகர்கள் நடாத்தவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஏறாவூர் தாமரைக்கேணியில் றிக்சா வண்டிகள் கண்டுபிடிப்பு!!





(ஏறாவூர் நஸீர்)

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் எரிபொருளுக்காக, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நாட்கணக்கில் காத்திருந்தும் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாமல் வீடுதிரும்பிய சுயதொழிலாளியான ஏறாவூரைச் சேர்ந்த ஹச்சிமுகம்மது நிஷாத், தன்னாலும் முடியும் என்று, தன்னிடமிருந்த பொருட்களைக் கொண்டு மூன்று றிக்சா வண்டிகளை வடிவமைத்து அவற்றை இன்று வெற்றிகரமாக இயக்கிக் காட்டியுள்ளார்.

உள்ளூர் பாடசாலை மற்றும் வைத்தியசாலைகளுக்கு செல்ல இந்த றிக்சாவை பயன்படுத்த முடியும்.

மேலும் மரக்கறி வியாபாரத்துக்கான றிக்சா வண்டி மற்றும்

உணவுப்பண்டங்கள் விற்பனைக்கான றிக்சா வண்டிகளையும் தயாரித்துள்ளார்.

தனது சுயமுயற்சியின் வெளியீட்டை காண பிரதேச மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீர், ஏறாவூர் பற்று பிரதேச சபை உறுப்பினர் அன்வர் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.முபாறக் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஐந்தாம் ஆண்டுவரை கல்விகற்ற நிஷாத் வெதுப்பக தொழிலை செய்து வந்ததோடு, சுயதேடலினால் கணணி ஒன்றை தயாரிக்கும் திறனையும் கொண்டிருக்கிறார்.

இவரது கடின உழைப்புடன் கூடிய, பல்வேறு சுயதேடல்களையும் முயற்சியையும் அனைவரும் பாராட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தகது.

# உளவியல் டிப்ளோமாவைப் பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்கள் வழங்கி வைப்பு







(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்துடன் இணைந்ததாக சாந்திகம் நிறுவனம் ஏற்பாடு செய்த ஒரு வருட உளவியல் டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் சாந்திகம் உள்ளக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஒரு வருட உளவியல் டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வின் போது பிரதம அதிதியாக சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் தவிசாளர் செயினுலாப்தீன் நஜ்முத்தீன் மற்றும் ஏனைய அதிதிகளாக சாந்திகம் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி சி.ஜீவசுதன், அதன் வரவிருக்கும் தலைவர் கலாநிதி கே. கஜவிந்தன், அதன் பணிப்பாளர் சி.திலீபன், சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் கல்விக்கான பணிப்பாளர் கலாநிதி சிஹ்னாஸ் துரே மற்றும் சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் கல்விக்கான இணைப்பாளரும் பிரதிப் பதிவாளரும் ஆசிரியருமான மௌலவி அல்-ஹாஜ் ஐ.எல் அப்துல் முனாப், அறிவிப்பாளர் ஏ.எம். இன்ஸாப் மற்றும் பல கல்விமான்கள், புத்திஜீவிகள், சான்றிதழ் பெறும் மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் உரையாற்றுகையில், 'கல்விதான் இந்த வாழ்க்கையினுடைய தலையெழுத்தை நிர்ணயிக்கப் போகின்றது. எங்களுடைய எதிர்காலம் சிறக்க வேண்டுமாக இருந்தால், கண்டிப்பாக எங்களுக்குக் கல்வி அவசியம். கல்விக்கு எப்போதும் வயது கிடையாது, அதற்கு எல்லை என்பதும் கிடையாது. யாவரும் கல்வியில் உச்சம் தொட வேண்டும். நாட்டினுடைய தற்போதைய நிலையினைக் கருத்திற் கொண்டு பார்க்கின்ற போது கல்வி அறிவைச் சிறப்பாகப் பெற்றவர்களால் மாத்திரம் தான் இந்த நாட்டைச் சிறப்பாக வழிநடாத்த முடியும்.

அவர்களுக்கு எவ்விதத் தடையும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. கால சூழலுக்கு ஏற்ப எச்சந்தர்ப்பத்திலும் கல்வி கற்பதற்கான வசதி வாய்ப்புகள் எங்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன.

எனவே, நாங்கள் எந்த வகையிலும் கல்வியைக் கற்றுக் கொள்ளலாம். எல்லோரும் கல்வியில் ஆர்வம் காட்ட வேண்டும். எல்லோரும் பல்துறை கற்க வேண்டும். கல்வியால் சிறக்க வேண்டும்' என்று கல்வியின் முக்கியத்துவம் சார்ந்த பல்வேறுபட்ட விடயங்களைக் குறிப்பிட்டார்.

# வாழைச்சேனை ஆயிஷாவில் சிரமதானம்


(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் சிரமதான நிகழ்வொன்று நேற்று முன்தினம் இடம் பெற்றது.

எரிபொருள் நெருக்கடி காரணமாக மூடப்பட்டிருந்த அனைத்துப் பாடசாலைகளும் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஆயிஷா வித்தியாலயத்தின் சூழல், வகுப்பறைகளை துப்பரவு செய்யும் பணிகள் அதிபர் என்.சஹாப்தீன் தலைமையில் இடம்பெற்றது.

இதில், உயர்தரப் பிரிவு பகுதித் தலைவர் எஸ்.பாறூக் கான் மற்றும் உயர்தர வகுப்பு மாணவிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.





# ரணில் விக்கிரமசிங்க நாட்டை ஆள தகுதி அற்றவர் அவர் உடனடியாக பதவி விலக வேண்டும்

(பாறுக் ஷிஹான்)

காட்டுமிராண்டித்தனமாக நடந்து போராட்டக்காரர்களைஅடக்க முற்பட்ட ரணில் விக்கிரமசிங்க நாட்டை ஆள தகுதி அற்றவர், அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

சங்கத்தின் கல்முனை தலைமையகத்தில் ஞாயிற்றுக்கிழமை (24) மாலை ஊடகவியலாளர் சந்திப்பு மேற்கொண்டு இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் தனது கருத்தில் குறிப்பிட்டதாவது;

அமைதி வழியில் கலைந்து செல்வதற்கு தயாராக இருந்த போராட்டக்காரர்கள் மீது அதிகாலையில் கட்டவிழ்த்து விடப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை எல்லோருடனும் சேர்ந்து நாமும் வன்மையாக கண்டிக்கின்றோம்.முப்படையினருக்கு திட்டமிட்ட வகையில் கூடுதல் அதிகாரம், அனுமதி ஆகியவற்றை வழங்கி போராட்டக்காரர்கள் மீது அடக்குமுறையை பிரயோகித்த ரணில் விக்கிரமசிங்க உடனடியாக ஜனாதிபதி பதவியைதுறக்க வேண்டும்.

அவசர கால சட்டத்தின் கொடூரங்களை காலம் காலமாக அனுபவித்தவர்கள் தமிழர்கள், தமிழர்களை அவ்விதம் அடக்கி ஆண்டு வந்த அனுபவத்தை சிங்கள பெரும்பான்மை மக்கள் மீது பிரயோகித்து வெற்றி காண முற்பட்டு உள்ளார்கள்.




நிராயுதபாணிகளான போராட்டக்காரர்கள் மாத்திரம் அன்றி உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்களும் படையினரின் பேயாட்டத்துக்கு உட்பட்டு பாரதூரமாக பாதிக்கப்பட நேர்ந்தது. இதையும் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

நாட்டின் தலைவர் என்கிற வகையிலும், பாதுகாப்பு அமைச்சர் என்கிற வகையிலும் இம்மிலேச்சத்தனமான தாக்குதலுக்கான தார்மீக பொறுப்பை ரணில் விக்கிரமசிங்க ஏற்று பதவி விலக தவறினால் அவருக்கு எதிரான சூறாவளி போராட்டம் தொடரும்.

யானையின் கால்களில் சிக்கிய எறும்புகளாக போராட்டக்காரர்களை நினைக்க வேண்டாம். கோத்தாவுக்கு ஏற்பட்ட நிர்க்கதிதான் ரணிலுக்கும் நேரும் என்பது திண்ணம். பதவி ஏற்று 24 மணித்தியாலங்கள் கழிவதற்கு முன்பாகவே சர்வாதிகாரியாக நடந்த ரணிலை நாட்டு மக்களும், நாமும். போராட்டக்காரர்களும் நம்பி நடப்பதற்கு எந்த அடிப்படையும் கிடையாது என்றார்.

## போலிஸ் நிலையங்களுக்கான புதிய பெயர் பலகைகள் நடும் திட்டம் முன்னெடுப்பு




(பாறுக் ஷிஹான்)

பொலிஸ் நிலையங்களுக்கான புதிய பெயர் பலகைகள் நடும் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பொலிஸ் நிலையங்களுக்கான பெயர் பலகைகள் புதிதாக மாற்றப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நீண்ட காலமாக சேதமடைந்து காணப்பட்ட கல்முனை தலைமையக பொலிஸ் நிலையம் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் போன்றவற்றுக்கான புதிய பெயர் பலகைகள் இன்று புதிதாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

குறித்த நடவடிக்கையினை கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் ஆகியோர் பார்வையிட்டனர்.

மேலும் கல்முனை பிராந்தியத்தில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பல பகுதிகளிலும் குற்றச்செயல்கள் குறைந்துள்ளதுடன் பொலிஸாரும் பொதுமக்களுடன் சிநேகபூர்வமாக தொடர்புகளை மேற்கொண்டு குற்றச் செயல்களை குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## குழப்பம் மிகு சமகாலச்சூழலில் இளைஞர் யுவதிகளின் எதிர்காலத்தை நிலை நிறுத்துதல் தோடர்பான செயலமர்வு







குழப்பம் மிகு சமகாலச்சூழலில் இளைஞர் யுவதிகளின் எதிர்காலத்தை நிலை நிறுத்துதல் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வளங்களை இளைஞர் யுவதிகள் கையாளும் விதம் மற்றும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெலுதல் போன்றவை தொடர்பிலான செயலமர்வு ஒன்று (24) திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு கரீத்தாஸ் எகெட் நிறுவனத்தின் இயக்குணர் ஏ.ஜேசுதாசன் அவர்களது ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தற்போதைய கால கட்டத்தில் இளைஞர் யுவதிகள் எதிர்கொண்டுள்ள சவால்கள், இளைஞர் யுவதிகள் எதிர்கெண்டுள்ள பொருளாதார சிக்கல்கள் மற்றும் நவீன தொடர்பாடல் சாதனங்களின் சாதக பாதக நிலைகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து சிரேஸ்ட வளவாளர்களான இருதையநாதன், மற்றும் கே.கணேசமூர்த்தி ஆகியோர் விளக்கமளித்தனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் யுவதிகள் எதிர்கொண்டுள்ள சவால்கள் தொடர்பிலும் அவற்றுக்கு எவ்வாறான தீர்வுகளை முன்வைப்பது தொடர்பிலும் கருத்துக்கள் பரிமாறப்பட்டிருந்தது.

குறித்த செயலமர்வில் மட்டக்களப்பு கரீத்தாஸ் எகெட் நிறுவனத்தின் சமாதான செயற்த்திட்ட இணைப்பாளர் இ.கிறிஸ்டி மற்றும் கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.




## பதில் நிர்வாக அலுவலகராக அந்தோனி சேபமாலை தல்மேய்டா தனது பணி போறுப்பேற்றார்

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 49 கிராம அலவலகர் பிரிவுகளுக்கான பதில் நிர்வாக அலுவலகராக திரு.அந்தோனி செபமாலை தல்மெய்டா நியமிக்கப்பட்டு வெள்ளிக்கிழமை (22.07.2022) தனது கடமையை மன்னார் பிரதேச செயலகத்தில் பொறுப்பேற்றுள்ளார்.



திரு. அந்தோனி செபமாலை தல்மெய்டா திரு , திருமதி ஆசீர்வாதம் அந்தோனி தல்மெடாவின் புதல்வனும் முருங்கன் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவனும் 1994 ஆம் ஆண்டிலிருந்து 28 வருடங்கள் கிராம அலுவலகராக கடமையாற்றியவரும் இவர் மடு மற்றும் மன்னார் பிரதேச செயலகப் பிரிவுகளில் கிராம அலுவலகராக கடமையாற்றியவரும் இவர் யுத்த காலங்களில் மடு பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்கள் மடு முகாமில் இருந்தபோது அங்கு முகாம் பொறுப்பாளராக இருந்ததுடன் தற்பொழுது சர்வமத குழு அமைப்பிலும் தேசிய சமாதான பேரவை அமைப்பிலும் இணைந்து நாடு மற்றும் மாவட்டத்தின் சமாதானத்துக்காக உழைத்து வருபவரும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# புதிய அரசியலமைப்பில் பெண்களின் உரிமைகள்!



அப்ரா அன்ஸார்





(ஊடக விளங்கறிவு மையம் (Cmil) நடாத்திய Reform watcட நிகழ்ச்சியின் Expert talk இல் பெண் உரிமை செயற்பாட்டாளர் நளினி ரட்னராஜா அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு.)

பெண் எனும் சொல்லில் தனித்துவமான மரியாதை கலந்துள்ளது. இதனாலே பெண் என்பவள் இயல்பிலேயே மென்மையானவள் என்ற கண்ணோட்டம் இருக்கின்றது.பெண் எனும் சொல் பல பொருள்களை உணர்த்துகின்றன.பால் வகுப்பில் 'பெண் பால்' எல்லா உயிரினங்களினதும் பெண்பாலாரை வயது வேறுபாடின்றி குறிக்கின்றது.மனித இனத்தில் பெண்ணுரிமை , பெண்ணியம் போன்ற சொற்கள் வயது வேறுபாடின்றி எல்லாப் பெண்களையும் குறிக்கின்றது.எனினும் பொது வழக்கில் பெண் எனும் போது அது வளர்ச்சியடைந்த மனித இனத்துப் பெண்பாலரையே பெரும்பாலும் குறிக்கின்றது.இவை சங்க கால இலக்கியம் மற்றும் பழமை தமிழில் பல்வேறுபட்ட கருத்தில் எழுதப்பட்டதாகும்.பெண்ணியம் என்பது பெண்களை தாழ்வுபடுத்தும் சமூக , அரசியல், பொருளாதார நடைமுறைகள் , கட்டமைப்புகள் மற்றும் சமத்துவமின்மையை எதிர்க்கும் கவலைப்படுத்தும் சமூக, கலாச்சார, அரசியல் , இயக்கங்கள் ,செயற்பாடுகள் , கோட்பாடுகளின் தொகுப்பாகும்.சமத்துவமின்மையின் மூலங்கள் சமத்துவத்தை அடைவதற்கான வழிமுறைகள் , பால் மற்றும் பால்நிலை அடையாளங்களை விமர்சிப்பது , கேள்விக்குட் படுத்துவதற்கான எல்லைகள் போன்றன தொடர்பில் பெண்ணியல்வாதிகளிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு.பால் அடையாளங்களான ஆண், பெண் போன்றவை வாதங்களும் உண்டு. எனினும் இன்று பெண்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகள் ஏராளம்.அதை நாம் நாளுக்கு நாள் பார்க்கின்றோம்.

பெண் உரிமைகள் என்பது அனைவரினதும் உரிமைகளையும் ,சுதந்திரங்களையும் குறித்து நிற்கின்றது. இந்த உரிமைகள் சட்டமாக்கப்படாது இருக்கலாம்.சமூகத்தில் இயல்பாக கொடுக்கப்படுகின்ற உரிமைகள் கூட பெண்களுக்கு மறுக்கப்படுகின்றன.ஆணாதிக்க சமூகத்தினால் பெண்களின் உரிமைகள் காலம் காலமாக புறக்கணிக்கப்பட்டு வருகின்றது.எனவே பெண்கள் இந்த உரிமைகளைப் பெற ஓர் எதிர் சாய்நிலை அமைந்துள்ளதையும் காணலாம்.பெண்களின் உரிமைகள் என்பது பாலியல் வன்முறைகளிலிருந்து விடுபடுதல் , வாக்குரிமை , பொது நிறுவனங்களில் வேலை செய்தல், குடும்ப உறவில் பெண்களின் உரிமை , சமமான ஊதியம் அல்லது சரியான ஊதியம் பெறுவது , குழந்தை பிறப்பு உரிமைகள், சொத்துரிமை , கல்வி உரிமை ஆகியவற்றை கூற முடிகின்றது.

அரசியலமைப்பில் பெண்கள் உரிமை பற்றி கூறப்பட்டிருந்தாலும் அவை நடைமுறைப்படுத்தாமலே இருக்கின்றது. இலங்கையில் இருக்கும் அனைவரும் சாதி, மதம், இனம் ,மொழி கடந்து சட்டத்துக்கு முன் சகலரும் சமமானவர்கள் என்று தான் எனினும் பெண்களை பொறுத்தவரை அவர்கள் இங்கு சமமானவர்களாகவே கருதப்படவில்லை. வேலை வாய்ப்பை எடுத்துக் கொண்டால் சுகாதாரத் துறை (PHI) ஊழியர்கள் முழுவதுமே ஆண்களாகத்தான் இருக்கின்றனர். 'போஸ்ட்மேன்' எடுத்தால் பெயரிலேயே 'மேன்' என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான தொழில்களுக்கு பெண்கள் விண்ணப்பித்தாலும் அவர்களை தெரிவு செய்வதில்லை. இதே மாதிரி தான் தாதியர் தொழில்களிலும் 96 %மானவர்கள் பெண்களாகவும் ஏனையவர்கள் ஆண்களாகவும் இருக்கின்றார்கள். இதெல்லாம் சமமற்றதாக உள்ளது .எனவே அரசியலமைப்பில் கூறப்படுகின்ற படி கொள்கைகளும், சட்டங்களும் சமமாக வகுக்கப்பட வேண்டும். பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிரான சட்டங்கள் 2005 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்தது.

இந்த வன்முறையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனினும் அதற்கான வசதி வாய்ப்புகள் கொடுக்கப்படாமல் இருப்பது குறைபாடாக உள்ளது.இவை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். புதிய அரசியலமைப்பில் இந்த மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அரசியலமைப்பை எடுத்தால் அங்கு ஆண், பெண் என்று இல்லாது பிரஜைகளுக்கான உரிமைகளாகவே இருக்கின்றது. அவ்வாறு இருந்தால் இந்த திட்டத்திலேயே மாற்றங்கள் கொண்டு வர வேண்டும் இவற்றை நடைமுறைப்படுத்துவதிலேயே பிரச்சினை இருக்கின்றது.அதாவது இந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு கொள்கை வேண்டும் அதே போல அவற்றை நடைமுறைப்படுத்த சட்டங்கள் தேவை, பெண்களின் சுகாதாரம் தொடர்பான தேவைகளை எடுத்துக் கொண்டால் கர்ப்பிணிப் பெண்களுக்கு மாத்திரம் தான் இலவச மருத்துவ முகாம்கள் இருக்கும். அவர்கள் குழந்தையை பிரசவிக்கும் வரை தான் அந்த பெண்ணின் உடல்நிலை பற்றி அக்கறை அரசுக்கு இருக்கும். பிள்ளை பேரு தாண்டி விட்டால் நீ எனக்கு அவசியமில்லை. திருமணமாகி பிள்ளை பிறக்காவிட்டால் நீ எனக்கு அவசியமில்லை என்றவாறு தான் நாட்டினுடைய சுகாதார வசதிகள் அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனாலேயே பெண்கள் சம்பந்தப்பட்ட மார்பக புற்றுநோய் ,கர்ப்பக புற்றுநோய் இன்று அதிகரித்துள்ளது. பெண் என்பவள் ஒரு இயந்திரம் என்றவாரே நோக்கப்படுகின்றது. அரசியலில் சமத்துவம் சொல்லப்பட்டாலும் நடைமுறை கொள்கை இங்கு முறையாக இல்லை என்பதை உண்மை. தொழில் புரிகின்ற பெண்களை எடுத்துக் கொண்டால் குறிப்பாக சுயதொழில் மேற்கொள்கின்றவர்களால் இந்த நாட்டுக்கு ஒரு வருமானம் கிடைக்கின்றது. எனவே நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் பெண்களுடைய உரிமைகள் மீள சரி செய்யப்பட்டு புதிய அரசியலமைப்பில் கொள்கையாக கொண்டு வரப்பட வேண்டும்.

அரசியல் யாப்பில் 12/1 ஆனது சட்டத்திற்கு முன் அனைவரும் சமன் என்று சொல்லப்பட்டுள்ளது.ஆனால் 12/5 சரத்தின் படி ஒவ்வொரு இனமும், மதமும் எழுதப்படாத சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும். எனவே இங்கு முதலாவது மற்றும் ஐந்தாவதற்கிடையில் சிக்கல்கள் உள்ளன. இவை நீக்கப்பட வேண்டும்.ஏனெனில் 12/5 இல் வழக்காற்றுச் சட்டங்கள் இருக்கின்றது.உதாரணமாக தேசவழமைச் சட்டம், முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் ,கண்டிய சட்டம் இந்த சட்டங்களில் வெளிப்படையாக பெண்களை ஓரம் கட்டியுள்ளது.இங்கு பாரபட்சம் நிலவுகிறது.தேசவழமை சட்டத்தை எடுத்துக் கொண்டால் காணி உரிமை பெண்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.ஒரு பெண் திருமணமாகிய பின்னர் தான் சுயமாக சம்பாதித்த அசையா சொத்துக்களை கணவனுடைய எழுத்து மூல ஒப்புதலின்றி நன்கொடையாக விற்பனை செய்ய முடியாது. இதனால் தான் யுத்தத்தில் கணவனை இழந்த பெண்களுக்கு சுய தொழிலில் ஈடுபட முடியாதுள்ளது.வங்கிகளில் கடன் கேட்டாலும் காணி பத்திரங்களை ஆதாரமாக கேட்கின்றனர். அதே போல தான் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.இங்கு அனைத்து சட்டத்திலும் பெண்களுக்கான காணிப் பங்கீடு மறுக்கப்பட்டுள்ளது.எனவே இவற்றையெல்லாம் திருத்திய புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்பட வேண்டும் என்பதே அனைத்து பெண்களினதும் கோரிக்கையாக உள்ளது.

இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டுமாயின் அந்நிய செலாவணி வீதம் அதிகரித்து உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும். எனவே இங்கு ஆண்களைப் போன்றே பெண்களும் நாட்டின் முன்னேற்றத்திற்கு போராடக் கூடியவர்கள், கஷ்டப்படக் கூடியவர்கள். பெண்கள் இந்த நாட்டின் கண்கள் அவர்களுடைய அனைத்து உரிமைகளும் சட்டரீதியாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதே அனைவரும் எதிர்பார்ப்பாகும்.

**நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டுமாயின் அந்நிய செலாவணி வீதம் அதிகரித்து உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும். எனவே இங்கு ஆண்களைப் போன்றே பெண்களும் நாட்டின் முன்னேற்றத்திற்கு போராடக் கூடியவர்கள், கஷ்டப்படக் கூடியவர்கள். பெண்கள் இந்த நாட்டின் கண்கள் அவர்களுடைய அனைத்து உரிமைகளும் சட்டரீதியாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதே அனைவரும் எதிர்பார்ப்பாகும்.**






# புதிய அரசியலமைப்பில் சிறுபான்மை சமூகம் சார்ந்தவர்களின் உரிமைகள் மற்றும் பாலின சிறுபான்மை சமூகம் சார்ந்தவர்களின் உரிமைகள்!



(ஊடக விளங்கறிவு மையம் (Cmil) நடாத்திய Reform watch நிகழ்ச்சியின் Expert talk இல் பெண் உரிமை செயற்பாட்டாளர் பிஸ்லியா பூட்டோ அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு)

'சிறுபான்மையினர்' என்று ஒரு குறிப்பிட்ட மக்கள் வர்க்கத்தை அழைப்பது சரியா என்ற கேள்வியை தொடுத்தால் நிச்சயம் அது பிழையானது என்று என்னால் கூற முடியும் ஏனெனில் ஒரு நாட்டினுடைய அவ்விருத்திக்கு ஏனைய வர்க்கத்தினர் எவ்வாறு பங்களிக்கின்றனரோ அதே அடிப்படையில் சிறுபான்மையினரின் பங்களிப்பு அமைந்துள்ளது. சிறுபான்மையினர் எனும் போது அதில் குறிப்பாக பாலின சிறுபான்மை மக்களின் உரிமைகளும் உள்வாங்கப்பட்டிருக்கும். எனினும் மாற்றுப் பாலின இனத்தவர்களை மனித உரிமைகள் கொண்ட ஒரு சமூகமாக இலங்கையின் சட்டத்துறை மற்றும் கலாச்சாரம் அணுகுவதில்லை இது இலங்கையின் மனித உரிமையை பாதுகாக்கும் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதில் பாரிய சவாலை ஏற்படுத்தியுள்ளது .பல நாடுகள் சிறுபான்மையினருக்கான உரிமைகளை முறையாக வழங்குகின்றனர்.இன்னும் சில நாடுகள் அவர்களை ஒடுக்குகின்றனர். எங்களுடைய நாட்டின் கடந்த கால வரலாற்றை எடுத்துப் பார்த்தோமேயானால் சிறுபான்மையினர் உரிமை என்பது முற்றாக மறுக்கப்பட்டுள்ளது. இதனை பல்வேறு சம்பவங்கள் உணர்த்தி நிற்கின்றன.

ஏற்கனவே உள்ள அரசியல் யாப்பின் 16வது சரத்தின் படி சிறுபான்மையினரின் உரிமைகளும் மாற்று பாலினத்தவர்களுடைய உரிமைகள் சட்டங்கள் அனைத்தும் உள்வாங்கப்பட்டுள்ளது. ஆனால் அதன் அதிகாரங்கள்



அனைத்துமே தற்போதுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினால் ஒடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தனியார் சட்டங்களை எடுத்துக் கொண்டால் அவற்றில் பல்வேறு திருத்தங்கள் தேவைப்படுகின்றது. சிறுபான்மையினரின் உரிமைகள் மீறப்படாது பாதுகாத்துக் கொண்டு செயல்படுதல், மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் இடம்பெறாமல் அதனை பாதுகாத்துக் கொண்டு செயல்படுதல் மற்றும் நாட்டின்ஜனநாயகத்தை முறையாக செயல்படுவது மிக முக்கியமானதாகும்.கடந்த காலங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் 196 அங்கத்துவ நாடுகள் இருக்கும் நிலையில் பேரவையின் இரண்டாவது தினத்திலேயே மனித உரிமை மீறப்பட்டுள்ளமை தொடர்பில் இலங்கையின் பெயர் பிரயோகிக்கப்பட்டது. இதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது இலங்கைக்கு எதிராக பாரிய அழுத்தங்களை ஏற்படுத்தக் கூடிய பலம் இருக்கின்றன. எனவே அந்த பலத்தை இல்லாமல் ஆக்குவதற்கு இலங்கையில் அனைத்து மக்களும் குறிப்பாக சிறுபான்மையின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்



அப்ரா அன்ஸார்

என்பது இங்கு பிரதானமானது. பல்லின மக்கள் வாழக்கூடிய இந்த நாட்டில் ஏனைய இன மக்களும் தங்கள் மத கலாசார உரிமைகளுடன் வாழ்வதை போன்று சிறுபான்மையினரின் உரிமைகளும் இங்கு உறுதிப்படுத்தும் வகையில் புதிய அரசியலமைப்பின் ஊடாக சட்டங்கள் கொண்டு வந்து அவை அமுல்படுத்தப்பட வேண்டும். இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும் பெரும்பான்மையினருக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அனைத்து உரிமைகளும் சிறுபான்மையினருக்கு வழங்க வேண்டும். சிறுபான்மையினர் உரிமைகள் எனும் போது அவர்களுக்கான காணி உரிமை, மொழி உரிமை, கல்வி உரிமை என்பது பிரதானமானது. சிறுபான்மையினருடன் தொடர்புடைய சட்டங்களைஅதாவது முஸ்லிம் தனியார்சட்டம் தேசவழமை சட்டம், கண்டிய சட்டம் என்பவன இன்னும் முறையாக திருத்தப்படாது இருக்கின்றது. எனவே புதிய அரசியலமைப்பின் ஊடாக இவற்றில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு அவை சட்டமாக அமுலாக்கப்பட வேண்டும் .முஸ்லிம் தனியார் சட்டத்தை எடுத்துக் கொண்டால் பெண் பிள்ளைகளின் திருமண வயது எல்லை சரியாக குறிப்பிடப்படவில்லை என்பது பாரிய பிரச்சினையாக உள்ளது. திருமண பதிவு என்பது கட்டாயம் இல்லை அதாவது (வெள்ளையில் எழுதுவது) பள்ளியில் அந்த புத்தகத்தில் கையப்பம் வைப்பது. இதனால் பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே புதிய அரசியலமைப்பில் இவை உள்வாங்கப்பட்டு சட்டமாக இயற்றப்பட்டால் ஒவ்வொருவரும் அவர்களுடைய உரிமைகளை பாதுகாக்க முடியும். தற்போதுள்ள இந்த இருபதாவது திருத்த சட்டத்தின் படி பெண்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளது. முஸ்லிம் தனியார் சட்டத்தில் பெண்களுடைய கருத்துக்கள் உள்வாங்கப்பட வேண்டும் இனிவரும் யாப்பு சீர்திருத்தத்தில் பெண்களுடைய வகிபங்கு 50% உள்வாங்கப்பட வேண்டும். அரசியலிலும் பெண்களுடைய பங்களிப்பு மிக மிகக் குறைவு. 2018 இல் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண்கள் 25% இல்லை எனவே பாராளுமன்றத்தில் பெண்களுடைய பிரதிநிதித்துவ வீதம் ஒரு குறிப்பிட்ட வீதமாக அரசியலமைப்பின் ஊடாகக் கொண்டு வரப்பட வேண்டும். எனவே அதன் மூலம் பெண்களுடைய அரசியல் பங்களிப்பு அதிகமாகும்.

சிறுபான்மை சமூகத்தினர் தங்களுடைய சமூகத்தில் மாற்றுப் பாலின இனத்தவர்களும் இருக்கின்றார்கள் என்பதை வெளிப்படையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களின் வீதம் இன்று அதிகரித்துள்ளது. அவர்களும் ஏனையவர்களைப் போன்று மனிதர்கள் எனவே அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். ஒவ்வொரு யாப்பினுடைய வடிவமைப்பிலும் சட்டங்கள் வரைவுகளை பார்த்தோமேயானால் கிராம மட்டங்களில் ஒவ்வொரு சட்டங்களும் அமுல்படுத்தப்படும் போது அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற நிவாரணங்களை உதாரணமாக எடுத்துக் கொண்டால் அதில் ஒவ்வொரு விடயங்களையும் பதிவு செய்வார்கள் அதில் ஆண், பெண் என்று குறிப்பிடப்பட்டிருக்குமே ஒழிய மாற்று பாலினத்தவர்கள் அல்லது ஏனைய பாலினத்தவர்களுக்கான அங்கீகாரம் அரச மட்டத்தில் மிக மிகக் குறைவாகவே உள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்போது இரண்டு வருட காலமாக தங்களுடைய ஒவ்வொரு செயல்திட்டத்திலும் அவர்களுக்கென்று தனியான ஒரு இடத்தை ஒதுக்கி வைத்துள்ளனர். ஆனால் அரசியல் ரீதியாக அவர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள் .அவர்களும் மனிதர்கள் எனவே அவர்களுடைய அனைத்து உரிமைகளும் அரசியலமைப்பு ரீதியாக சட்டமாக கொண்டு வரப்பட வேண்டும். எனவே சிறுபான்மையினர்களின் உரிமையோடு சேர்த்து, மாற்று பாலின சிறுபான்மையினர்களின் உரிமைகளும் இங்கு புதிய அரசியல் யாப்பினூடாக சட்டமாக இயற்றப்பட வேண்டும் என்பதே அனைவரது கோரிக்கையாக உள்ளது.

---

# இளைஞர்கள் விழித்துக் கோள்ளவேண்டும்

கோவிலூர் செல்வராஜன்



தற்போதைய இளைய சமுதாயம் சமூக வலைத்தளங்கள் அதாவது இணையம் என்னும் மாய வலைக்குள் சிக்கி மூழ்கிக் கொண்டிருக்கிறது. இணையம் என்பது பரந்து விரிந்த விஷயமாக இருந்தாலும், அதன் ஒரு புள்ளிக்குள்ளேயே இளைய சமுதாயம் சுற்றி சுற்றி வருவதால், அதன் சிறகுகள் பறப்பதற்கு பதிலாக முடமாக்கப்பட்டுள்ளது.

இணையத்தில் தெரிந்து கொள்ள இயலாத விஷயங்களே இருக்க முடியாது, பார்க்க முடியாத விஷயங்களே இல்லை, எத்தனையோ பல்கலைக்கழகங்கள் இணையம் வாயிலாக படிப்புகளை வழங்கி வருகிறது, நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும் அந்த நபரை, இணையத்தின் வாயிலாக நாம் இருக்கும் இடத்தில் இருந்து பார்க்க முடியும்,

பேச முடியும், எங்கோ ஒரு தலைவர் பேசுவதை இணையத்தின் மூலமாக உடனுக்குடன் நாம் தெரிந்து கொள்ள முடிகிறது என இணையத்தைப் பற்றிய நல்ல விஷயங்களை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

ஆனால், இந்த நல்ல விஷயங்களில் ஒன்றையாவது நமது இளைய சமுதாயம் பயன்படுத்திக் கொள்கிறதா? திறன்பேசியில் சிக்கி சீரழிந்த நமது இளைஞர்கள், தற்போது, திறன்பேசியில் இணைய சேவையைப் பெற்று மேலும் வேகமாக அழிவுப் பாதையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இணையமும், தொலைத்தொடர்பும் மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் பயன்படும் என்ற எண்ணம் தற்போது மறுக்கப்பட்டு, இளைய சமுதாயத்தின் சீரழிவுக்கே இதுதான் காரணமாக உருமாறிவிட்டது.

படிப்புக்காகவும், செய்திகளை அறிந்து கொள்ளவும், செய்திகளை பரிமாறிக் கொள்ளவும் எத்தனை இளைஞர்கள் கணினியையோ,திறன்பேசியையோ பயன்படுத்துகிறார்கள்.. மிகச் சிலரே. அதற்கு பதிலாக முகநூல் பக்கத்தில் அல்லவா தங்களது வாழ்நாளை எவ்வித குற்ற உணர்ச்சியும் இன்றி கரைத்துக் கொண்டிருக்கிறார்கள்

சமீபத்தில் நடந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில், பொறியியல் மற்றும் தகவல் தொலைத்தொடர்பு படிப்புகளில் படித்துக் கொண்டிருக்கும், படித்து



முடித்து வேலை செய்யும் இளைஞர்களிடம் சமுதாயத்தைப் பற்றி கேள்விகள் கேட்கப்பட்டன. தற்போது சமுதாயம் சந்திக்கும் அவலங்கள் பற்றி அவர்களுக்குத் தெரிந்த விஷயம் பூஜ்யமாகத்தான் இருந்தது.

இது ஒரு சாதாரண விஷயமாக எடுத்துக் கொண்டால் சாதாரணம் தான். ஆனால், நமது இளைய சமுதாயத்தின் பொது அறிவுக்கு இவர்கள் ஒரு உதாரணம் என்று எடுத்துக் கொண்டால் அது சமுதாயத்தின் அசாதாரண விஷயம் என்பது தெரிய வரும்.

சமுதாயத்தில் தற்போதிருக்கும் ஒரு அவல நிலை குறித்துக் கூட இளைஞர்கள் தகவல்களை தெரிந்து வைத்துக் கொள்வதில்லை. செய்தித்தாள் படிக்கும் பழக்கம் மாணவர்களிடையே குறைந்து வருகிறது. இதற்கு உடனடி காரணத்தையும் பலர் வைத்திருக்கிறார்கள். அதாவது, அதிகப்படியான கல்விச் சுமையை காரணம் கூறுகிறார்கள். கல்விக் சுமை காரணமாக செய்தித் தாள் படிக்க முடியாமல் போகும் அதே இளைய சமுதாயம், திறன்பேசியில் பேசவோ,முகநூலில் பதிவு செய்யவோ தவறுவதில்லை.

நூறில் 25 சதவீதத்தினர் செய்தித்தாள் படித்தால், நூற்றுக்கு நூற்று ஐம்பது பேர் முகநூல் தொடர்பில் இருக்கிறார்கள். முகநூல் பக்கங்களிலும் எத்தனையோ நல்ல விஷயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் அவற்றை எல்லாம் யார் பார்ப்பது? நமக்குத் தேவையானது, நமது நண்பர்களைப் பற்றி கிண்டல் செய்வதும், நமது அழகான புகைப்படங்களை அப்டேட் செய்து அதற்கு பல நூறு விருப்புகளை பெறுவதுமே.

இதெல்லாம் இளைய சமுதாயத்தின் பொழுதுபோக்கு அம்சங்களாக இருப்பதில் தவறில்லை. ஆனால் இது ஒரு போதையாக மாறிவிடக் கூடாது. இதனால் எதிர்காலமே சூன்யமாகிவிடக் கூடாது என்பதுதான் தற்போதைய கவலை.

இணையத்தின் மூலம் எதிர்காலத்தை நல்ல முறையில் உருவாக்கிக் கொள்ளலாம். ஒரு நாளைக்கு ஒரு செய்தியையாவது படிப்பதையும், ஒரு தலைவரின் வாழ்க்கை வரலாறை அறிந்து கொள்வதையும், படிப்பு மற்றும் பணி நிமித்தமான விஷயங்களை படித்து உங்களை அதற்கேற்ற வகையில் உருவாக்கிக் கொள்வதையும் வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

நீங்கள் படித்த விஷயங்களை உங்கள் நண்பர்களுடன் பேஸ்புக்கில் பகிர்ந்து உங்களை அறிவுஜீவியாக மாற்றிக் கொள்ளுங்கள். உங்கள் வழி பின்பற்றி உங்கள் நண்பர்களும் வருவார்கள்.

பொது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவருக்கும் அவசியமாகிறது. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது போல வெறும் கல்லூரி படிப்பு மட்டுமே வாழ்க்கையின் இலட்சியத்தை அடைய போதுமானதாகாது என்பதை நினைவில் கொண்டு இனியாவது இணையத்தை முன்னேற்றப் பாதையில் பயன்படுத்துவோம்

# ரஸ்ய இலக்கியத்தின் சீர்திருத்த கவிஞன் : ஜோர்ஜிய தந்தைக்கும் - உக்ரேனிய தாய்க்கும் பிறந்த ரஸ்யக் கவிஞர் விளாடிமிர் மாயகோவ்ஸ்கி



'நான் ஜோர்ஜியாவில் பிறந்தேன், என் தந்தை ஒரு ஜோர்ஜியர், என் தாய் ஓர் உக்ரேனியர், என் வாழ்வின் மொழி ரஸ்யா, இவ்வாறு மூன்று கலாச்சாரங்கள் என்னுள் ஒன்றுபட்டுள்ளன,' என்று வரலாற்றுப்

புகழ் கவிஞர் மாயகோவ்ஸ்கி தன்னை உலகிற்கு அறிமுகப்படுத்துகிறார்.

விளாடிமிர் மாயகோவ்ஸ்கியை (Vladimir Mayakovsky) பொறுத்தவரை, ஜார்ஜியா அவரது அழகிய தாய் நிலத்தின் நித்திய சின்னமாக இருந்தது என்றும், தன் வாழ் நாளை ரஸ்ய மண்ணிலேயே கவித்துவம் பெற்று வரலாற்றுப் புகழ் அடைந்துள்ளார்.


ரஷ்யாவின் சீர்திருத்த கவிஞரான விளாடிமிர் மாயகோவ்ஸ்கி 19 ஜூலை 1893 பிறந்த தினமாகும். அத்துடன் அவர் 14 ஏப்ரல் 1930 இறக்கும் வரை சோவியத் மண்ணில் ஒரு நாடக ஆசிரியராக, நடிகராகவும் விளங்கியுள்ளார்.

## ரஷ்ய கவிதையின் சீர்திருத்தவாதி :

சோவியத் காலத்தில் மாயகோவ்ஸ்கி ரஷ்ய கவிதை மொழியின் தீவிர சீர்திருத்தவாதியாகக் கருதப்பட்டார். அவர் புதிய வகையான வெளிப்பாடுவாதத்துடன் தனது சொந்த மொழியியல் கவிதை இலக்கியத்தை உருவாக்கினார். இது சோவியத் மற்றும் உலகக் கவிதைகளின் வளர்ச்சியில் பல வழிகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம்.

ரஷ்யாவில் பலரால் ஒரு புரட்சிகர சக்தியாகவும், 20 ஆம் நூற்றாண்டின் ரஷ்ய இலக்கியத்தில் ஒரு மாபெரும் கிளர்ச்சியாளராகவும் பார்க்கப்பட்ட மாயகோவ்ஸ்கியின் ஆரம்பகால கவிதைகளால் அவரை சீர்திருத்தவாதியாகவே நிலைநிறுத்தியது,

இவரின் பாரம்பரிய கவிதைகள் புரட்சியை முறையான பரிசோத



னைக்கு உட்படுத்த ஆதரவாகவும், நவீன தொழில்நுட்பத்தால் வாக்குறுதியளிக்கப்பட்ட சமூக மாற்றத்தையும் வரவேற்கிறது.

1917 ஆம் ஆண்டுக்கு முன்னர் புரட்சிக் காலத்தின் போது, மயோகாவ்ஸ்கி, ரஷ்ய புரட்சிக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒரு முக்கிய நபராகப் புகழ் பெற்றார்.

## ரஷ்ய புரட்சியில் படைப்புகள் :

மயாகோவ்ஸ்கி அவரது வாழ்க்கையில் பல்வேறுபட்ட படைப்புகளை உருவாக்கியிருந்தார். அவர் கவிதைகள் எழுதினார், நாடகங்களை எழுதினார், இயக்கினார்; படங்களில் தோன்றினார், ஃஉஊ என்னும் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். ரஷ்ய புரட்சிப் போரின்போது கம்யூனிஸ்ட்டுகளுக்கு ஆதரவாக படைப்பக்களை உருவாக்கினார்.

## லெனின் மீது வலுவான பற்று :

மயாகோவ்ஸ்கி கம்யூனிஸ்ட் கட்சியின் சித்தாந்தத்திற்கான கருத்தியல் ஆதரவைத் தொடர்ந்து நிரூபித்துள்ளதுடன், விளாதிமிர் லெனினின் மீது வலுவான பற்றுக் கொண்டிருந்தபோதும் சோவியத் அரசுடன் மயாகோவ்ஸ்கியின் உறவு எப்போதும் சிக்கலானதாகவே இருந்தது.

மயாகோவ்ஸ்கி சோவியத் அரசின் கலாச்சாரத் தணிக்கை, சோஷலிச யதார்த்தவாதத்தின் மீதான அரசின் கோட்பாட்டு வளர்ச்சியோடு தொடர்ந்து மோதலில் ஈடுபட்டார். திபெட்பக் (1929) தி பேட்ஹவுஸ் (1929) உள்ளிட்ட அவருடைய கவிதைத் தொகுப்புகள் சோவியத் அரசு மற்றும் அதன் இலக்கிய நடைமுறைகளின் மீதான நையாண்டி விமர்சனமாக அமைந்திருந்தன.

பாட்டாளி வர்க்க எழுத்தாளர்கள் (RAPP) என்னும் ரஷ்ய அரசின் ஆதரவு இயக்கத்தால் அவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்தார். 1930இல் மயாகோவ்ஸ்கி இறந்த பின்னரும் கூட சோவியத் அரசின் ஜோசப் ஸ்டாலின், மயாகோவ்ஸ்கியை, 'சோவியத் நாட்டின் சகாப்தத்தில் மிகச் சிறந்த திறமையான கவிஞராக அறிவித்தார்.



## மயாகோவ்ஸ்கி இளமைப் பருவம் :

மயாகோவ்ஸ்கி அப்போதைய ரஷ்யப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்த ஜார்ஜியா மாநிலத்தில் பாக்தாதி என்னும் இடத்தில் பிறந்தார்.

தந்தை வழியில் ஜோர்ஜிய வம்சாவளியாகவும், தாய்வழியில் உக்ரேனிய வம்சமாகவும் இருந்தார். வீட்டில் ரஷ்ய மொழியைப் பேசினர். அவரது நண்பர்களிடத்திலும் பள்ளியிலும் மயகோவ்ஸ்கி ஜார்ஜியன் மொழியில் பேசினார்.

## ஐந்து வயதிலேயே மயாகோவ்ஸ்கி

தன் வயதுக்கு அதிகமான பாடல்களை மனப்பாடம் செய்து கூறும் ஆற்றலைப் பெற்றிருந்தார். இவர் விரும்பிப் படித்த முதல் நூல் 'டான் குவிக் சாட்'.

ஒரு பக்கம் கவிதை, மற்றொரு பக்கம் புரட்சி, கவிதையும் புரட்சியும் என் உள்ளத்தில் பின்னிப்பிணைந்து விட்டது என்று தனது இளமைக் குறிப்பில் எழுதியிருக்கிறார்.

1906இல் மயாகோவ்ஸ்கி மாஸ்கோவில் ரஸ்ய இலக்கியத்தின் மீது ஆர்வம் பெற்று, மார்க்சின் முன்னுரையை விடவும் எனக்கு உயர்ந்த கலை இல்லை என்று அவர் தனது சுயசரிதையில் நினைவு கூர்ந்துள்ளார்.

## கல்லூரி வாழ்கை

ஷெல்லி கல்லூரியில் மயாகோவ்ஸ்கி படித்துக் கொண்டிருந்தபோது 'நாத்திகத்தின் அவசியம்' (The Necessity of Atheism) கட்டுரை எழுதி வெளியிட்டதற்காகக் கல்லூரி நிர்வாகத்தால் வெளியேற்றப்பட்டார்.

பின்னர் ஓவியக்கல்லூரியில் பயின்றபோது பழைய மரபுக்கலையை (Bourgeois Art) இகழ்ந்து பேசியதற்காகக் கல்லூரி நிர்வாகத்தால் வெளியேற்றப்பட்டார் மாயகோவ்ஸ்கி. கலைக்கல்லூரியை விட்டு வெளியேற்றப்பட்டபோது இவரின் தாய் நீ எப்படியாவது இந்தப்படிப்பை முடித்திருந்தால் நன்றாயிருந்திருக்கும் என்று வருத்தத்தோடு சொன்னார். அதற்கு

ஓவியத் தொழில் செய்யத் தனியாக ஒரு கூடமும் திரைச் சீலைகளும், வண்ணங்களும் தூரிகைகளும் இன்னும் பலவும் தேவைப்படும். ஆனால் கவிதை எழுத பழைய நோட்டுப்புத்தகம் ஒன்று இருந்தால்போதும்; எந்த இடத்திலும் உட்கார்ந்து கொண்டு எழுதலாம். எனவே நான் கவிஞனாகப் போகிறேன். என்று சொன்ன மாயகோவ்ஸ்கி மாகவிஞனாக ஆகிவிட்டார்.



## இலக்கியக் கொள்கை

மாயகோவ்ஸ்கியின் ஆரம்பகால பாடல் வரிகளில் ஆன்மீக உலகைப் பற்றி ஓயாமல் பேசிக் கொண்டிருப்பதைக் கைவிட்டு விட்டுக் கலையானது வெட்கப்படாமல் உலகியலைப் பற்றியும், மனிதனின் அடிப்படைத் தேவைகளைப் பற்றியும் பேசவேண்டும் என்று வற்புறுத்தினார்.

மயாகோவ்ஸ்கி கலை, மனித உணர்வுகளைப்பற்றியதாக இருக்க வேண்டுமே தவிர, கண்ணுக்குப் புலப்படாத ஏதோ ஒன்றைப் பற்றியதாக இருக்கக்கூடாது என்பது அவன் கருத்து. மேலும், அது தனிப்பட்ட ஒரு மனிதனின் உணர்ச்சி வெளிப்பாடாக இருப்பதை விட, கொள்கைகளின் கூட்டுக் குரலாக ஒலிக்கும்போது அதன் அர்த்தம் புலப்படும் என்று சொன்னார்.

கலையைப்பற்றித் தான் வெளிப்படுத்திய கருத்துக்கள் மக்களிடையில் பரவ வேண்டுமென்று என்பதற்காக மாயகோவ்ஸ்கி 1912-இல் 'ஜனரஞ்சகத்தின் கன்னத்தில் ஓர் அறை' (A slap In The Face of Public Taste) என்ற படைப்பை வெளியிட்டார்.

ரஸ்யாவில் மிகவும் போற்றி மதித்த இலக்கியவாதிகளான புஷ்கின், டாஸ்டாவ்ஸ்கி, டால்ஸ்டாய் ஆகியோரைத் தொடர்ந்து மாயகோவ்ஸ்கி ரஷ்ய எதிர்கால இலக்கியத்தை நிறுவியவர்களில் ஒருவர் என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

சர்வதேச முற்போக்கு கவிதைகளின் ஒற்றுமைக்காக பாடுபட்ட மாயகோவ்ஸ்கியின் கவிதைகளில் ஒரு பிரகாசமான வண்ணத் திட்டம் ஒளிர்ந்தது. வடிவியல் உருவங்களின் உதவியுடன் உலகைப் பிரதிபலித்த ஒரு கவிஞர் மட்டுமல்ல, ஒரு கலைஞரும் கூட.

புரட்சிக் கொள்கையை உள்ளடக்கி சமுதாயத்தின் அடிமட்டச் சூழ்நிலையிலிருந்து இக்கலைவடிவம் உருப்பெற்றாலும், எந்த உலகை நோக்கி இது பேசுகிறதோ அந்த உலகை அடியோடு மாற்றியமைக்கும் கலையே உயிர்ப் பேராற்றலாக விளங்கும் என மாயகோவ்ஸ்கி குறிப்பிட்டார்.

## இறப்புக்குப் பிந்தைய அங்கிகாரம்

மாயகோவ்ஸ்கி உயிரோடு வாழ்ந்த காலத்தில் சோவியத் அரசாங்கமும் அதன் தலைவர்களும் இவரைப் புரட்சிக் கவிஞனாக அங்கிகரிக்கவில்லை. ஐரோப்பிய இலக்கிய வாதிகளும் அக்காலத்திய 'புஷ்கினாக' இவரை ஏற்றுக் கொள்ளவில்லை.

அக்மடோவா, பாஸ்டர்நாக், மேண்டெல்ஸ்டாம், ஸ்வெட்டேவா ஆகியோருக்கு அடுத்த நிலையிலேயே இவருக்கு இடம் ஒதுக்கினர்.

இவரது இறப்புக்குப் பிந்தைய காலமான 1935-இல் பொதுவுடைமைக் கட்சியின் வேண்டுகோளின்படி ஸ்டாலின் மனந்திறந்து மாய கோல்ஸ்கியைப் பாராட்டி அறிக்கை விட்டார்.

அதன் பிறகே மாஸ்கோ இலக்கியவாதிகள் மாயகோவ்ஸ்கியை ஒப்பற்ற புரட்சிக் கவிஞனாக ஏற்றுக் கொண்டனர்.

இவரது கவிதைகளும் எந்த வித விமர்சனமும் இல்லாமல் மக்களால் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டன. சோவியத் அரசாங்கம் புரட்சிக் கவிஞனாக இவரை அங்கீகரித்தது.

## கிர்கிஸ்தானில், னைவுச்சின்னம் :

சர்வதேசமே போற்றிப்பாராட்டிய மாயகோவ்ஸ்கிக்கு ரஸ்யாவில் மாத்திரமின்றி கிர்கிஸ்தானில், தலைநகர் பிஷ்கெக்கிற்கிலும் நினைவுச்சின்னம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐங்கரன் விக்கினேஸ்வரா

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 20

# மூத்த எழுத்தாளர் கலாபூணம் அம்பலவாணர் கௌரிதாசன் கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

**மானுடத்தின் சமூக, பண்பாட்டு வரலாற்று விழுமியங்களின் பொக்கிமே இலக்கியங்கள் ஆகும். இவை வாழ்வின் முறை நிலைக்களங்களை, தனி மனித சமூக ஏக்கங்களை, எதிர்பார்ப்புக்களை நம் மனக்கண் முன்னே நிலை நிறுத்தும் ஆற்றல் மிக்கவை. படைப்பாளியானவன் தனது படைப்பின் மூலமாக சமூகம் பற்றிய தன் எண்ணக்கருவை உணர்ச்சி வயமாகவும், ஏற்ற பாத்திரப் படைப்பினூடாகவும் இலக்கியச் சுவையினை தன்னுடன் இழுத்துச் செல்வதற்கு முயற்சி செய்கின்றான்.**




அவ் வகையில், அம்பலவாணர் இரத்தினம்மா தம்பதிகளுக்கு 1959ஆம் ஆண்டு பிறந்த இவர் திருக்கோணமலையின் பழம் பெரும் கிராமமான ஆலங்கேணி கிராமத்தினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவராவார். எழுத்திலக்கியத் துறையில் 45 வருடங்களுக்கு மேலாக கலைச்சே




வையாற்றி வருபவரான மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் அ.கௌரிதாசன் கலைஞர் சுபீட்சம் வாராந்தப் பத்திரிகையின் ''திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை'' என்ற பகுதிக்கு வழங்கிய செவ்வி காணலை இங்கு காணலாம்.

**? உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

தீந்தமிழ் வாழும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து 20கிலோமீற்றர் தொலைவில் உள்ள அழகிய கிராமமான ஆலங்கேணி எனது பிறப்பிடமும், வாழிடமுமாகும். தந்தையார் அம்பலவாணரும் ஒரு எழுத்தாளர். 1960ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவர் எழுதி வெளியிட்ட ''மனித வாழ்வின் போராட்டம்'' என்ற நூல் பல சமூகத்தாலும் சிலாகித்துப் பேசப்பட்டதாகும். எனது மனைவி ஓய்வு பெற்ற தமிழாசிரியை. எனது இரண்டு புதல்விகளும் ஆசிரியைகளாகவே உள்ளனர். மூத்த புதல்வி தேடல் கலை இலக்கிய அமைப்பின் நிறுவுனராக இருந்து கலைச் சேவை செய்து வருவதோடு கிண்ணியா பிரதேச கலாசாரக் குழுவிலும் அங்கத்துவம் வகிக்கிறார். விடிசேவல் கலை இலக்கிய ஒன்றியம், சிரேஷ்ட பிரசைகள் சங்கம் என்பவற்றில் தலைவராகவும், சூரியகாந்தி சனசமூக நிலையம், ஆலங்கேணி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் செயலாளராகவும் உள்ளேன். மேலும் நான் ஒரு சமாதான நீதிவானாகவும் சேவை புரிகின்றேன்.



தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்

**? இத்துறையில் நீங்கள் எழுதி வெளியிட்ட சுய ஆக்கப் படைப்புகள், நூல்கள் பற்றி?**

1. ஆலையூர்ப் பதிகம் ( பக்தி இலக்கியம்) - 1990
2. கௌரிதாசனின் காதற் பாவைகள் - 1991
3. கௌரிதாசன் கவிதைகள் - 1996
4. மழலைப்பா (சிறுவர் இலக்கியம்) - 2003
5. ஒரு கவிதை எழுதி விட , ..(கவிதை) - 2014
6. என் பாடல் (கவிதை) - 2015
7. தேடல் விழுதுகள் (தொகுப்பு நூல்) - 2018
8. என் உயிரில் நீ பாதி (கவிதை) - 2021

**? கவிதைத் துறை மட்டுமன்றி வேறு கலைத்துறையில் உங்களது செயற்பாடு குறித்து?**

கிண்ணியாப் பிரதேசத்தில் வெளிவந்த கையெழுத்துப் பத்திரிகைகளான கேணிச்சுடர், ஈச்சம்பழம் போன்றவற்றில் சின்னஞ் சிறுகதைகளை எழுதிட வந்த நான் எழுத்துலக ஜாம்பவான் எஸ்.டீ.சிவநாயகம் அவர்கள் சிந்தாமணி பத்திரிகை ஆசிரியராக இருந்த போதும் சின்னஞ் சிறுகதை, குறுங்கதைகளை எழுதியிருக்கிறேன். அவற்றில் ''ஏமாற்றம், அக்கா தந்த பரிசு, தீர்ப்பு, பழி, பிரிவு, நிம்மதி தந்தவள்'' போன்றவை வாசகர்களால் சிலாகித்துப் பேசப்பட்ட குறுங்கதைகள். தினகரன் பத்திரிகையிலும் கட்டுரைகள் சிலவற்றை எழுதியிருக்கிறேன். இவை தவிர, பல எழுத்தாளர்களின் நூல்களுக்கு அணிந்துரை, பாராட்டுரை, வாழ்த்துரை, மகிழ்ந்துரை, பின் அட்டைக் குறிப்புகளையும் எழுதிட வழங்கியுள்ளேன். மேலும் பாடசாலை மாணவர்களுக்கு கட்டுரை, பேச்சு, வில்லிசை, நாடகம், உரையாடல் பிரதிகளையும் ஆக்கிட அளித்துள்ளேன்.

**? நீங்கள் வாழும் ஆலங்கேணிக் கிராமத்தில் கலை சார் செயற்பாடுகளும், கலைஞர்களுக்கான அங்கீகாரமும் எவ்வாறு உள்ளது?**

எனது கிராமத்திலுள்ள அமைப்புக்கள், பாடசாலைகள் யாவும் கலைஞர்களுக்கான மதிப்பு, மரியாதை, அங்கீகாரம் என்பவற்றை தவறாது வழங்கி வருகிறது. கவிஞரேறு தாமரைத்தீவான், கவிஞர் கேணிப்பித்தன், அமரர்களான கவிஞர் ஆலையூரன், கவிஞர் ஈச்சையூர்த்தவா போன்றவர்களோடு எனக்கும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கவிமணி, கவிப்புரவி, கவிப்புயல், கவிஞர்கோன் போன்ற பட்டங்களையும் எனது கிராமத்தவர்கள் மனமுவந்து வழங்கியமையைக் குறிப்பிடலாம்.



**? மரபுக் கவிதையில் சிறந்து விளங்கும் மூத்த கவிஞரான நீங்கள் இத்துறையில் கைக்கொள்ளும் உத்திகள் குறித்து?**

கற்பனைக்கும் ஒப்பனைக்கும் இடம் வழங்குவதனைத் தவிர்த்து, சமகாலப் பிரச்சினைகளை, யதார்த்தங்களை எனது கவிதையின் பாடு பொருளாக்கிக் கொள்வதனால் எனது கவிதைகள் யாவும் விரைவாகச் சென்றடையும் வழியே நான் கைக் கொள்ளும் உத்தி. இதனால் 'மக்கள் கவிஞன்' என்ற கௌரவத்தினை சிறகுகள் இலக்கிய வட்டம் வழங்கியமை சான்றாகும்.

**? உங்களது கிராமத்தில் உங்கள் கலைக்கான வரவேற்பு எவ்வாறு உள்ளது?**

எங்கள் கிராம மக்கள் கலைத்துறையில் அதீத ஈடுபாடு உள்ளவர்கள். இதனால் வருடா வருடம் விடிசேவல் கலை இலக்கிய ஒன்றியத்தால் தைப்பொங்கல் விழா, சித்திரைக் கோலம், தீபஒளித் திருநாள் விழா ஆகிய விழாக்களை நடத்தி பங்கு பற்றுனர்களுக்கு சான்றிதழ், விருது என்பன வழங்கி வருகிறோம்.

**? திருக்கோணமலை மாவட்டத்தில் உங்களது கலைச் சேவை எவ்வாறு உள்ளது?**

திருகோணமலை மாவட்டத்திலுள்ள எனது வயதுக்குட்பட்டவர்கள், மூத்த கலைஞர்களோடு நட்பு ரீதியான தொடர்புகள் உண்டு. இற்றை வரைக்கும் நூல் வெளியீடுகள் மற்றும் இலக்கிய விழாக்கள், கவியரங்குகளில் தவறாது பங்கேற்பது. திருமலை மாவட்ட இலக்கிய அமைப்புகளுக்கு இயன்றளவு பங்களிப்புச் செய்வதும், ஆலோசனைகள் வழங்குவதும் கலைச் சேவையின் காத்திரமான பங்குபற்றுதலாகும்.

**? கலை மன்றங்களிலும், சமூக செயற்பாடுகளிலும் உங்களது செயற்பாடு குறித்து?**

திருகோணமலை, கிண்ணியா, ஆலங்கேணி போன்ற இடங்களிலுள்ள கலை இலக்கிய மன்றங்களின் உறுப்பினராகவும் உள்ளேன். ஆலங்கேணி நூலக வாசகர் வட்டம், கிண்ணியா நகர சபையின் ஆலோசனைச் சபையிலும் சிரேஸ்ட ஆலோசகராகவும் இருக்கிறேன்.

**? இன்றைய காலகட்டத்தில் கவிதைத் துறையின் போக்கு எவ்வாறு உள்ளது?**

நிறையவே கவிஞர்கள் இருக்கின்றனர். அவர்களின் நூல்களும் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. இருந்த போதிலும் மனந்திறந்து கூற விழைந்தால், கவிதைத்துறை மாற்றம் பெறவும், வளர்ச்சி பெறவும் வேண்டியுள்ளது.

மிகுதி 10 ஆம் பக்கம் பார்க்க...

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 20

# மூத்த எழுத்தாளர் கலாபூணம் அம்பலவாணர் கௌரிதாசன் கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

**? தற்சமையம் எழுத்துத் துறையில் பல இளந்தலைமுறையினர் ஈடுபட்டு வருகின்றனர். அது குறித்து மூத்த கலைஞராக உங்களது கருத்து?**

பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல என்ற புறநானூற்றுப் பாடல் போல இப்போதுள்ள சந்ததியோடு இலக்கியம் முடிவுறக் கூடாது. எதிர்காலப் படைப்பாளிகள் யாப்புகளை ஒழுங்காகக் கற்று நிலையான தடம் பதிக்க வேண்டுமென்று அவாவுறுகின்றேன்.

**? திருக்கோணமலை மாவட்டத்தில் கலைத்துறையிலுள்ள இடர்பாடாக நீங்கள் கருதுவது?**

நூல் வெளியீட்டுக்கான அச்சகச் செலவு, வெளியீட்டு விழாவுக்கான இதர செலவுகள், 100பேருக்கு வீடு தேடிச் சென்று அழைப்பிதழ்கள் வழங்கினாலும் 30பேர் வரை வருகை தரல். சில இலக்கிய நிகழ்வுகளுக்கு பரவலான சிந்தனையின்றி குறுகிய வட்டத்துக்குள் சிலருக்கு மாத்திரம் அழைப்பு விடுப்பது. அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கப்படாமையும் ஒரு குறை பாடாகவே நான் காண்கிறேன்.

**? நம் மண்ணின் போற்றுதலுக்குரிய பல மூத்த கலைஞர்களுக்கான அடையாளங்கள் மருவிக் கொண்டு செல்கின்றன. அது குறித்து மூத்த கலைஞரான உங்களது கருத்து?**



மூத்த கலைஞர்களுடைய அடையாளங்கள் மருவிக் கொண்டு செல்கின்றன என்ற கருத்தை முழுமையாக ஏற்க முடியாது. ஏனெனில், ஏ.சீ.எம்.முஸ்இல் இலக்கிய ஆளுமைகள் என்ற நூலையும், எம்.சீ.எம்.கரிபு முதுசங்கன் என்ற நூலையும் வெளியிட்டுள்ளனர். இது போல பத்திரிகைகளிலும் அவ்வப்போது பீ.ரீ.அஸீஸ், எம்.எம்.ஏ.அனஸ், திருமலை நவம், வே.தங்கராசா, ஜே.பிரேஸ்கான், மைதிலி, சித்தி அமரசிங்கம், திருமலை சுந்தா, செ.ஞானராசா, ஜெனீரா தௌபீக், அநாமிகா வெளியீட்டகம் மற்றும் சுபீட்சம் பத்திரிகையில் வாரா வாரம் ஞா.தட்சாயினி போன்றவர்களும் கலைஞர்களின் நேர்காணலை வழங்கி வருவதும் காணக் கூடியதாக உள்ளது. மேலும் திருக்கோணமலைக் கவிராயர் தா.சீ.வில்வராசா என்பவர் சிறந்த ஒரு கவிஞர். இவரது கவியரங்கக் கவிதைகளை நான் மாணவனாக இருக்கும் போது கண்டு வியந்திருக்கின்றேன். திருமலை இலிங்கநகரில் நடைபெற்ற ஒரு கவியரங்கில் அவர் தலைமையின் கீழ் கவிதை பாடியுள்ளேன். அவரது ஆக்கங்கள் இதுவரை நூலுருப் பெறவில்லை என்பதனையும் பதிவு செய்ய விரும்புகிறேன்.







**? கலைத்துறை செயற்பாட்டில் உங்களது குடும்பத்தாரின் பங்களிப்பு குறித்து?**


பாடசாலை வாழ்விலே கலை இலக்கியத்தோடு எனக்கு நெருக்கம் இருந்ததன் விளைவாக ஒரு கவிஞனாக நிமிர்ந்து நிற்கிறேன். அதற்கு எனது தாய், தந்தை, சகோதரர்களும் பக்க பலமாக இருந்தார்கள். பாடசாலையை விட்டு விலகிய பின்னர் 'விடிசேவல் கலை இலக்கிய ஒன்றியம்' என்ற ஒரு மன்றத்தை உருவாக்கி கலை இலக்கிய நிகழ்வுகளை முன்னெடுத்து வந்தேன். திருமணத்துக்குப் பின்னர் எனது மனைவியின் ஒத்தாசையுடன் 'வரப்பு' என்ற மகுடத்தில் மரபுக் கவியேட்டினை நடத்தி வந்தேன். தற்போது எனது மூத்த புதல்வி 'தேடல் கலை இலக்கிய அமைப்பின்' நிறுவுனராக இருந்து ஐந்தாண்டுகள் நேர்த்தியாக, போட்டிகளை முகநூலில் நடத்தி விருதுகளும் வழங்கிக் கலைஞர்களை ஊக்குவித்தார். இவரது ஒத்தாசை எனது எழுத்துத் துறைக்கு நிறைவாக உள்ளது என்பதனையும் குறிப்பிட விரும்புகிறேன்.


**? கலைத்துறையில் இதுவரையில் நீங்கள் பெற்ற விருதுகள் குறித்து?**

கவிமணி - 1999, கவிப் புரவி - 2021, கவிப் புயல் -2014, தமிழருவி -2001, காவிய ஸ்ரீ - 2012, கவி மழை - 2016, கலாமணி - 2014, மக்கள் கவிஞன் - 2014, கவிஞர் திலகம் - 2001, திருமலைக்கவி - 2017, கவிச்சுடர் - 2002, கவிஞர் கோன் - 2015, கவிப் பரிதி - 2019, இலக்கிய வித்தகர் - 2020, கலாபூஷணம் - 2021, மூத்த எழுத்தாளர் - 2013

**? இலக்கியத் துறையில் உங்களது எதிர்கால படைப்புகள் குறித்து?**

காகிதாதிகள் விண்முட்ட விலை உயர்ந்த இந்தக் கால கட்டத்தில் படைப்புக்களை நூலுருவில் காண்பதென்பது பொருளாதார வளம் குன்றியவர்களுக்கு இந்த எண்ணம் கைகூடாதென்றே கருதுகின்றேன். எனினும், என்னிடம் கைவசமுள்ள ஒரு குறுங்காவியம், சிறுவர் பாடல், கவிதைத்தொகுதி மற்றும் எனது இலக்கிய நினைவுகள் சார்ந்த கட்டுரைத் தொகுதி எதிர்காலப் படைப்புக்களாக வெளி வரலாம்.ஆயுளும், பொருள் வளமுமே இதனைத் தீர்மானிக்கும்.




**? நிறைவாக, சாதிக்க நினைக்கும் இளங் கலைஞர்களுக்கு கூற விரும்புவது?**

பாவேந்தர் பாரதிதாசன் கூறியது போல 'நூலைப்படி' என்றுதான் கூற வேண்டியுள்ளது. கண்டதும் கற்றவன் பண்டிதனாவான். வாசிப்புப் பழக்கம் ஒரு மனிதனைப் பூரணமாக்கும் என்பதற்கு அமைவாக தமிழ் ஒளி வ.அ.இராசரத்தினம் போல, தினமும் படுக்கைக்குச் செல்ல முன்னர் ஆங்கில நூலோ, தமிழ் நூலையோ 100 பக்கங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். தீவிரமான தேடலும், வாசிக்கும் பழக்கமும், மனனஞ் செய்தலும், யாப்பிலக்கணத்தை உரியவர்களிடம் தேடிக் கற்றலும் இளங் கலைஞர்கள் எதிர்காலத்தில் சாதிக்கவும், பிரகாசிக்கவும் வழிவகுக்குமென்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். சமூக மாற்றம், சமூக விழுமியங்களைப் பேணுவதற்கு எழுத்துக்களில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இலக்கியம் காலக் கண்ணாடி என்பதனை இதுதான் உறுதி செய்யும்.எனக் கூறிக்கொண்டு எம் போன்ற மூத்த கலைஞர்களுக்கான களத்தினை 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை' என்ற பகுதியின் ஊடாக வாய்ப்பளித்து வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்வதோடு இப்பணித் தொடர வாழ்த்துகின்றேன்.

நன்றி!

**மூத்த எழுத்தாளராக தனக்கென்று ஓர் அடையாளத்தைப் பெற்று நம் திருக்கோணமலை மண்ணிற்கு அளவில்லா புகழையும், பெருமையையும் தேடித் தந்த இக் கலைஞர் மென்மேலும் பல படைப்புகளைப் படைத்து உலகளவில் கலைச் சேவை ஆற்றி விருதுகளையும், பாராட்டுக்களையும் பெற்று தேகாரோக்கியத்துடன் இருக்க இறைவனைப் பிரார்த்திப்பதோடு இப்பணித் தொடர மனதார வாழ்த்துகின்றேன்.**

**தொடரும்..... கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு**





# மாடுகளின் கழிவுகளை பயன்படுத்தி
# வீட்டில் இயற்கை எரிவாயு உற்பத்தி செய்யும் கால் நடை வளர்ப்பாளர்

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பல்வேறு பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதனை யாவரும் அறிவோம் அந்த வகையில் இந்த தருணத்தில் இயற்கை எரிவாயுவினை தனது வீட்டில் வளர்க்கும் பசு மாடுகளின் கழிவு மூலமாக இயற்கை எயிவாயுவினை தயாரித்து வருபவரே எச்.ஏ.கிரி பண்டா இவர் திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மெடியாவ தெற்கு கிராம சேவகர் பிரிவில் வசித்து வருகிறார்.

வீட்டில் வளர்த்து வரும் மாடுகளின் ஊடாக கிடைக்கப் பெறும் மலம் சாணம் போன்ற கழிவுகளை பயன்படுத்தி இயற்கை எரிவாயுவை தன்னகத்தே உற்பத்தி செய்து வீட்டுப் பாவனைக்காக பயன்படுத்தி வருகின்றார். இதனால் அவரது அன்றாட வீட்டுக்கு தேவையான சமையல் , மின் குமிழ்களுக்கான மின்சார தேவைகளையும் இதன் ஊடாக பூர்த்தி செய்வதாக தெரிவிக்கிறார்.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க 2006,2007 ம் ஆண்டு காலப் பகுயியில் சமுர்த்தி வாழ்வாதார அபிவிருத்தித் திட்டம் ஊடாக குறித்த நபருக்கு பசு மாடுகள் வழங்கப்பட்டிருந்தன




ஹஸ்பர் ஏ ஹலீம்

இதன் ஊடாக மாடுகளை வளர்த்து பால் உற்பத்தியிலும் தொடர்ந்தும் முன்னேற்றம் கண்டதுடன் இவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டு மாடுகளின் கழிவுகளை கொண்டும் மேலதிகமாக பயனடைந்து வருகிறார். 2013 ம் ஆண்டு தொடக்கம் இயற்கை எரிவாயுவினை உற்பத்தி செய்து வருகின்றார். மலம் சாணம் போன்ற கழிவுகளை சேமிக்க மாட்டு பண்ணையில் இருந்து கிணறு போன்ற சேமித்து வைக்கக் கூடிய குழி வகையினை உருவாக்கா அதன் ஊடாக இந்த பயனை பெற்று வருகின்றார்.கண்டி குண்டசாலை விவசாயக் கல்லூரியில் இதற்கான ஆரம்ப கட்ட பயிற்சியை பெற்ற இப் பண்ணையாளர் இது தொடர்பில் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக எரிவாயு தட்டுப்பாடு நிலவுகிறது இதனை தீர்க்க வேண்டும் இதற்காக ஒரு வீட்டில் இரண்டு மாடுகள் இருந்தால் ஒரு குடும்பத்துக்கு தினமும் போதுமான இயற்கை எரிவாயுவினை உற்பத்தி செய்து வீட்டு சமையல் உட்பட மின் குமிழ்கள் போன்றவற்றை ஒளிரச் செய்யலாம் இதற்காக அனைத்து நபரும் முயற்சி செய்யுங்கள் .வெளிநாட்டில் இருந்து எரிவாயு வரும் வரைகாத்திருக்க வேண்டிய அவசியம் கிடையாது நீண்ட வரிசை தேவையில்லை தங்களை தாங்களே உற்பத்தி செய்து கொள்ளலாம் இதனை வைத்தே நான் எனது வீட்டில் சமையல் மற்றும் மின் குமிழ்களை ஒளிரச் செய்து வருகின்றேன் இதன் ஊடாக எரிவாயு கொள்வனவு செய்யும் பணம் மிச்சம் இந்த பணம் வெளிநாடுகளுக்கே செல்கிறது இதனை தவிர்த்து நாமே உற்பத்தி செய்தால் பொருளாதார நெருக்கடியில் இருந்தும் எரிவாயு பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும் என்றார்.



இவ்வாறான இயற்கை எரிவாயுவை பல மடங்கு கொண்ட உற்பத்தியினை அதிகரிப்பதாக இருந்தால் வாயுவை அடைத்து கொள்ளக்கூடிய கொள்கலன்கள் தேவைப்படுகிறது இதன் மூலம் உற்பத்தி செய்தால் ஏற்றுமதியை கூட அதிகரித்து வருமான மீட்டலாம். குறிப்பாக இவ்வகையான திட்டங்களை மேற்கொள்ள சுயதொழில் முயற்சிகளை திறம்பட பயிற்சியளித்து உள்வாங்கினால் தற்போதைர எரிவாயு பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் வெளிநாடுகளில் இருந்து வரும் வரைக்கும் எரிவாயுவை பெற நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

பொருளாதார நெருக்கடியை சமாளிக்க பல்வேறு புதிய உத்திகளை கையாள வேண்டும் எமது நாட்டில் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியுள்ளது இதனால் தான் உணவு பஞ்சத்தை தீர்க்க முடியும் போன்ற விடயங்களும் பேசப்படுகிறது இவ்வாறான விடயங்களை அரச மட்டம் ஊடாக நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது அதன் ஒரு கட்டமாக தம்பலகாமம் பிரதேச செயலக சமுர்த்தி நிதி ஊடான கடன் திட்டம் மூலமாக வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஊக்குவிக்கப்பட்டு வருகிறது .குறித்த பிரதேசத்துக்கு இயற்கை எரிவாயு உற்பத்தியினை பார்வையிடுவதற்கான அண்மையில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெயகௌரி ஸ்ரீபதி, உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக் உள்ளிட்ட குழுவினர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர் அது தொடர்பிலும் இதன் போது கேட்டறிந்து இயற்கை எரிவாயு உற்பத்தியை அதிகரிக்க ஊக்குவிப்பு முயற்சியினையும் மேற்கொண்டனர்.

இவ்வாறான பண்ணை வளர்ப்பாளர்களை ஊக்குவித்து பொருளாதாரத்தை மேம்படுத்துவது சாலச் சிறந்தது இது விடயம் தொடர்பில் ஏனைய பண்ணைத் தொழிலாளர்கள் கால் நடை வளர்ப்பாளர்களையும் ஊக்குவித்து அதனை முயற்சி செய்து மாற்றஙாகளை உருவாக்க வேண்டும் இதற்கான தொழில் நுட்ப அறிவை வளர்க்க அதற்கான பயிற்சிகளையும் வழங்க உரிய தரப்பினர் காத்திருக்கிறார்கள்.

